பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 01 சனிக்கிழமை (16-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 273

# உதவும் நாடுகளின் கூட்டம் திங்களன்று!

## 3 ஆயிரம் கோடி ரூபா நிதியை ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்க்கிறது

கொழும்பு, நவம்பர் 16

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நாளை மறுதினம் பாரிஸில் நடைபெறவிருக்கின்றது.

வரவு–செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டவும் புனரமைப்பு, அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் உதவும் நாடுகளிடமிருந்து இம்முறை 2 ஆயிரத்து ஐநூறு கோடி ரூபா முதல் 3 ஆயிரம்கோடி ரூபா வரை அரசு எதிர்பார்ப்பதாக பிரதி நிதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் சொன்னார்.

ஸ்ரீலங்கா அரசு இவ்வளவு தொகையை எதிர்பார்த்தாலும் அவ்வளவு கிடைப்பது கஷ்டமே என செய்தி ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

யுத்தத்தால் சீரழிக்கப்பட்டவற்றை புனரமைப்புச் செய்ய பெரும் நிதி உதவியை முன்பே இலங்கை அரசு கோரியிருந்தது. பல நாடுகள் நிதி உதவி வழங்க அப்போது வாக்குறுதி அளித்திருந்த போதிலும் நடைமுறையில் பெரிதாக எதுவும் இடம் பெறவில்லை. 'முதலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுங்கள். அதன்பின் உதவிகள் தாராளமாக வரும்.' — என மேற்குநாடுகள்பட்டவர்த்தனமாகச் சொல்லப் போவதாக ராஜாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

முன்னையஐ தே.க. அரசை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் குண்டு வெடிப்பில் அறுவர் காயமடைந்தனர்

### திருநெல்வேலி சந்தைப் பகுதியில்

யாழ்ப்பாணம், நவ. 16

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற கிரனேட் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆறு பேர் காயமடைந்தனர்.

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் பலாலி வீதியில் காலை 10.45 மணிக்கு இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களான

(8 ஆம் பக்கம் பார்க்க)



திவுலப்பிட்டி வத்துப்பிட்டிவெல ஆஸ்பத்திரியில் மார்புப் பகுதியில் ஒட்டிய நிலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

தற்போது கொழும்பு லேடி றிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இக்குழந்தைகளை பிரித்தெடுப்பதற்கான சத்திரசிகிச்சைக்கு உதவ பல தனியாருடன் பொது அமைப்புக்களும் முன்வந்துள்ளன.

மெல்போர்னில் உள்ள இலங்கை டாக்டர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் உள்ள பிரபல சிறுவர் ஆஸ்பத்திரி ஒன்றில் இக்குழந்தைகளைப் பிரிக்கும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

இலங்கையில் உள்ள லயன்ஸ் கழகங்களும் இம் முயற்சிக்கு உதவ முன்வந்துள்ளன

உலகில் இவ்வாறு ஒட்டிப் பிறந்த 15 ஆவது சோடிக் குழந்தைகள் இவர்களாகும். இலங்கையில் இத்தகைய குழந்தைகள் பிறந்தது இது இரண்டாவது தடவையாகும்.

# ஆயுதத்தை மௌனமடைய செய்து புலிகளைப் பேச்சுக்கு அழைக்குக

## நாடாளுமன்றில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கோரிக்கை

கொழும்பு, நவ. 16

''விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள ஆயுதங்களை கீழே வைத்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்கு பதிலாக, ஆயுதங்களின் மௌனம் (Arms Silence) என்ற அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி சிந்திக்கவேண்டும்''.

தொலைத் தொடர்பு, தபால் தந்தி பிரதி அமைச்சர் எம். எச். எம். ஹிஸ்புல்லா வரவு — செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தத்தினால் வடக்கு—கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் மற்றும் பிரச்சினைகளில் இருந்து விடுபடவும்—

நாட்டை அழிக்கும் யுத்தம் முடிவுக்கு வருவதற்கும் —

சகல தரப்பினரும் தமது பேதங்களை மறந்து பிரச்சினைத் தீர்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி விருப்பம் தெரிவித்திருந்தார். இதற்காக இரண்டு நிபந்தனைகளை அவர் விதித்திருந்தார். இவற்றை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

இந்த இரு நிபந்தனைகளும் ஒன்றும் புதிதல்ல, வழமையான ஒன்றே'' என்று அவர்கள் காரணம் கூறி நிராகரித்துவிட்டனர்.

பேச்சுக்கு ஜனாதிபதி இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார். சமாதான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் உண்ணாவிரதம் தற்காலிகமாக நிறுத்தம்

### 35 பேர் உடன் விடுதலையாவர்

கொழும்பு, நவ. 16

எதிர்வரும் 18 ஆம் திகதி சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த களுத்துறை சிறைச்சாலை தமிழ்க் கைதிகள், நேற்று முன்தினம் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் அளித்த உறுதிமொழியையடுத்து தமது உத்தேச உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளனர்.

மனித உரிமைகளுக்கான இல்லம் அமைப்பைச்சேர்ந்த சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி வேளாயுதம் சகிதம் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி எஸ். கமலத் நேற்றுமுன்தினம் களுத்துறை முகாமுக்கு சென்றார்.

தமிழ்க்கைதிகளை துரிதமாக விடுதலை செய்வது, புனர் வாழ்வு முகாமுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான லொறிகள் நிறுத்தம்

கொழும்பு, நவ. 16

நொச்சிமோட்டை கொக்குவெளிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் லொறிகள் எதுவும் வன்னிப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு பகுதிகளில் உணவுப் பொருள்களுக்கும், அத்தியாவசியப் பொருள்களுக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தை நள்ளிரவு கலக்கிய சூட்கேஸுகள்!

புத்தளம், நவ. 16

புத்தளம் நகர மத்தியில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளையில் அநாதரவாகக் கிடந்த மூன்று சூட்கேஸுகளால் நகரம் அல்லோல கல்லோலப்பட்டது.

நள்ளிரவு 2 மணியளவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் அந்த இடத்தை முற்றுகையிட்டனர்.

குண்டுகள் வைக்கப்பட்ட சூட்கேஸுகள் எனப் பரவிய வதந்தியால் என்ன நடக்குமோ என்று மக்கள் திகிலடைந்திருந்தனர்.

பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு பொலீஸாரும் வந்து சேர்ந்தனர். பின்னர் அந்தச் சூட்கேஸுகள் சோதனையிடப்பட்டபோது அதில் வெறும் உடுப்புகளே இருந்தன.

பின்னர் இதுகுறித்து விசாரித்தபோது, அங்கிருந்த புடைவைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு உடுப்புகள் களவாடப்பட்ட விடயம் தெரியவந்ததாம். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகரின் அனுமதியின்றி எம். பிக்களைக் கைது செய்யலாம்

கொழும்பு, நவ. 16

நாடாளுமன்ற உறுப்பினர்களை விசாரணை செய்வதற்கோ அல்லது கைது செய்வதற்கோ பொலீஸார் சபாநாயகரின் முன் அனுமதிபெற வேண்டியதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விசாரணை செய்வதற்கோ அன்றி விசாரணையின் பின்னர் கைது செய்வதற்கோ தம்மிடம் அனுமதி பெற வேண்டிய கட்டாயம் இல்லை என்று சபாநாயகர் கே. பி. இரத்நாயக்கா பொலீஸாருக்கு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த வாரம் இரகசியப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய முடிவு ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சி எம். பிக்களை மட்டுமின்றி, அரசாங்க எம். பிக்களையும் தாம் விசாரணை செய்ய நேரிடலாம் என்றும் —

எனவே முன் அனுமதிபெறாமல் அவ்வாறு விசாரிக்கவும் கைது செய்யவும் தமக்கு அனுமதி தருமாறு பொலீஸார் கேட்டதைத் தொடர்ந்தே சபாநாயகர் புதிய முடிவுக்கு வந்துள்ளார்.

எனினும் எம். பி ஒருவரை விசாரித்தது குறித்தோ, கைது செய்தது குறித்தோ தமக்குத் தகவல் தரவேண்டும் என்றும். அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் சபாநாயகர் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)





## லாவண்யா

**பல், மூக்குக் கண்ணாடி அகம்**

செவ்வாய், வியாழன், சனி
காலை **8-30** மணி முதல் பகல் **12-30** மணி வரை
யாழ். வீதி, நெல்லியடி
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுபவர், கண்பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர். இன்றே நாடுங்கள்:

**Dr. றெஜி சொலமன்,**
மின்சார நிலைய வீதி,
(பஸ்தரிப்பு நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம். (சி-3506)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி திலகராணி இளையப்பு

யாழ். அரச செயலக ஓய்வு பெற்ற உத்தியோகத்தரும், யாழ் மாவட்ட சமாதான நீதிவானுமாகிய ''சமூகரத்தினம்'' எம். கே. இளையப்பு - இராஜேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் மாணவியுமாகிய செல்வி திலகராணி இளையப்பு 14 - 11 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் குமாரகுலசூரியர் (புகையிரதத் திணைக்களம் வவுனியா), கிருபாகர சூரியர் (பத்திரிகைச் செய்தியாளர்), திருமதி செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீவதனி, சசீந்திரா (ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), சிறீசிவாயன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிரிதரன், விஜிதா, சசிதரன், சுரேந்திரா, விஜேந்திரா ஆகியோரின் சின்ன அத்தையுமாவார்.

இவரது இறுதிக் கிரியைகள் நேற்று (15 - 11 - 96) நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
எம். கே. இளையப்பு (J.P)

குமரகிரி,
கோப்பாய். (43667)

## வீரசிங்கம் கந்தசாமி

(கந்தரோடை)

கந்தரோடையைச் சேர்ந்த வீரசிங்கம் கந்தசாமி கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-11-96) சனிக்கிழமை பகல் 12 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. லோகேஸ்வரன்
(மருமகன்)

கந்தரோடை,
சுன்னாகம். (சி/3504)

## வினாசித்தம்பி சிவஞானசுந்தரம்

(ஆயுர் வேத வைத்தியர், நீர்வேலி)

நீர்வேலி ஆயுள்வேத வைத்தியர் வினாசித்தம்பி சிவஞானசுந்தரம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், தர்மசேகரம், கமலாதேவி, தங்கராசா (வேலைப் பரிசோதகர், பிரதேச செயலகம், கோப்பாய்), நவரத்தினராசா, யோகராணி, யோகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி (தையல் போதனாசிரியை, முறைசாராக் கல்வி நிலையம், இணுவில்), யோகேஸ்வரி (தாதி உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), லோகநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும், விபுசானந்தி, உஷானந்தி, பிரஷானந்தி, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீர்வேலி வடக்கில் இன்று (16-11-1996) காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
சி. தங்கராசா
(மகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (43666)

## ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கை

சென்னை, நவ. 16

இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுக்க தனுஷ்கோடியிலும், இராமேஸ்வரத்திலும் தமிழ்நாடு விசேட பொலீஸ் படையின் இரு பிரிவுகளும், பெரும் எண்ணிக்கையான உள்ளூர் ஆயுதப் படையினரும் நிறுத்தப்பட்டுள்ளனர் என்று தமிழ் நாடு காவல் துறையின் சட்டம், ஒழுங்குக்கும் பொறுப்பான இன்ஸ்பெக்டர் ஜெனரல் வி. காளிமுத்து தெரிவித்தார்.

அத்துடன் தீவிரவாதிகள் எளிதாக ஊடுருவக் கூடிய நிலைகள் எனக் கருதப்படும் நிலைகள் மீதும் பாதுகாப்பு முஸ்தீபு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (இ-3)

## நெற்பயிர்ச் செய்கை வீழ்ச்சி

வலி-தென்மேற்கு, நவ. 16

யாழ். குடாநாட்டில் இம்முறை நெற் பயிர்ச் செய்கை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது கமநலசேவை நிலையங்களில் விதை நெல் விநியோகம் செய்யப்படுகின்ற போதிலும் காலம் பிந்தி விநியோகிக்கப்படுவதனாலும் மழை அற்ற காரணத்தினாலும் நெற் பயிர்ச்செய்கை சரிவரக்கூடிய வாய்ப்புகள் குறைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-145)

## ஏப்ரலுக்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்கள்?

கொழும்பு, நவ. 16

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் நடத்தப்படலாம் என தெரியவருகின்றது.

இது குறித்த முடிவை பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைப் பீடம் எடுத்துள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மஸ்கெலியப் பகுதியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நேர்முகத் தேர்வு இன்று நடைபெறவிருக்கிறது.

இதேவேளை — உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து அரசாங்கம் இ. தொ. காவுடனும், மலையக மக்கள் முன்னணியுடனும் பேச்சு நடத்தி வருகிறது. (இ-3)

## பீரிஸ் தலைமையிலான குழு இவ்வாரம் பாரிஸ் செல்லும்

கொழும்பு, நவ. 16

பாரிஸில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தலைமையிலான இலங்கைக் குழு இந்த வார இறுதியில் பயணமாகும்.

இலங்கை கூடுதல் நிதி உதவியைப் பெற இக்கூட்டத்தில் தீவிர முயற்சி எடுக்கவிருக்கிறது. (இ-3)

## மனித உரிமைக் குழுக்களை வடக்கில் செயற்பட அனுமதி

### தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

வடக்கு - கிழக்கில் நிகழும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அங்கு சென்று செயலாற்ற அனுமதியளிக்க வேண்டும் என்றும் —

அத்துடன் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த வேண்டும் என்றும் — தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியைக் கோரவுள்ளன.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள சூழ்நிலைகள், வவுனியாவில் அகதிகள் படும் இன்னல்கள், கிழக்கு மாகாண நாளாந்தப் பிரச்சினை ஆகியன தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாகவும் —

இதுதொடர்பாக புளொட், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் — ஈ பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (இ- 3)

## அச்சுவேலி சம்பவம் குறித்து படைத்தரப்பில் விளக்கம்

அச்சுவேலி பத்தைமேனிப் பிரதேசத்தில் வசிக்கின்ற — புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் — பத்து வயதான மாணவியிடம் முறைகேடாக நடந்து கொண்டதாக வித்தியாலயத்தின் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரசாரம், உண்மைக்குப் புறம்பாக மாற்றியமைக்கப்பட்ட ஒன்றென விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது —

இவ்வாறு யாழ். இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

உண்மைக்கு முற்றிலும் புறம்பான கூற்றுக்களினதும், பிரசாரங்களினதும் மூலமாக அந்த ஆசிரியர்கள் பாடசாலையில் கல்வி பெறும் மாணவர்களையும் தூண்டி கடந்த 14 ஆம் திகதி பாடசாலையை மூடிவிட்டனர்.

முறைப்பாடு கிடைத்தவுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை ஒன்று திரட்டி அதில் சம்பந்தப்பட்ட சிறுமியின் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. ஆனால் மாணவியினால் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

அதன் பின்னர் தமிழ் மொழியை நன்கறிந்த பெண் இராணுவ அதிகாரி ஒருவர் சிறுமியின் தந்தை முன்னிலையில் சிறுமியிடம் விசாரித்த போது, பாடசாலை ஆசிரியர்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு போலியானது எனத் தெரியவந்துள்ளது.

இராணுவச் சிப்பாய் தன்னிடம் முறைகேடாக நடந்து கொள்ளவில்லை எனவும், தன்னை விசாரணைக்கு மட்டுமே உட்படுத்தியதாகவும் சிப்பாய் கேள்வி கேட்டதில் தாம் பயம் கொண்டதாகவும் சிறுமி தெரிவித்தார்.

சிப்பாய் தன்னிடம் முறைகேடாக நடந்து கொண்டதாக தான் பாடசாலை அதிபரிடமோ, ஆசிரியர்களிடமோ ஒரு போதும் தெரிவிக்கவில்லை என்றும் சிறுமி குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிறுமியின் தந்தை பாடசாலை அதிபரினால் முன்வைக்கப்பட்ட இந்த முறைப்பாட்டைப்பற்றி தாம் பின்னர் தெரிந்து கொண்டுள்ளதாகவும், மகளிடம் விசாரித்த போது உண்மையான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டிச் சம்பவத்தில் சிப்பாய்கள் விளக்கமறியல்

உடுப்பிட்டி இராணுவ காவல் நிலையம் ஒன்றில் தவராசா முரளீதரன் என்ற இளைஞன் கொலையுண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இரு இராணுவத்தினரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் முனிதாஸ நாணயக்கார நேற்று உத்தரவிட்டார் என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இம்மாதம் 29 ஆம் திகதி வரை இவர்கள் விளக்க மறியலில் வைக்கப்படுவர் என்றும் —

பருத்தித்துறை பொலீஸார் இது தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகிறார்கள் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் (இராமநாதன் நுண்கலைப் பிரிவு உட்பட) இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் தவணை விரிவுரைகளும், முதலாம்வருட மாணவர்களுக்கான இரண்டாம் தவணை விரிவுரைகளும் 18-11-1996 அன்று ஆரம்பமாகும். சகல மாணவர்களும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவும்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (சி/3507)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கிழக்குத் திமோரில் ஆர்ப்பாட்டம்

டிலி, நவ. 16

சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஆயர் காலோஸ் எக்ஸ்மைன் சிவை ஆதரித்து கிழக்கு திமோரில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆயர்கள் மாநாட்டில் ஆயர் காலோஸ் தெரிவித்த கருத்துக்கள் காரணமாக அவரை நாடு கடத்தப்போவதாக இந்தனோசிய அரசு அச்சுறுத்தியுள்ளது.

இந்தோனேசிய இராணுவம் மக்களை அடிமை போல் நடத்துவதாக ஆயர் காலோஸ் மாநாட்டில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

1976 ஆம் ஆண்டு இந்தோனோசியா அரசாங்கம் கிழக்கு திமோரை அதன் 27 ஆவது மாகாணமாகப் பிரகடனம் செய்தது.

ஆனால் ஐக்கியநாடுகள் சபை இதனை இன்னும் அங்கீகரிக்கவில்லை

போர்த்துக்கலினால் நிர்வகிக்கப்படும் ஒரு பகுதியாகவே கிழக்கு திமோரை ஐக்கிய நாடுகள்சபை இன்னும் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மத்திய கிழக்கு பேச்சில் திருப்பம் ஏற்படும் அறிகுறி

டெல் அவில், நவ. 16

மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தையில் புதிய திருப்பம் ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

மேற்குக் கரை ஹெப்ரோன் நகரத்துடன் நின்றுவிடாது பலஸ்தீன சுயாட்சியை வேறு பகுதிகளுக்கும் விரிவு படுத்துவதற்கான உறுதியை எழுத்து மூலமாக யாசீர் அரபாத்திடம் தர இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு உறுதி அளித்துள்ளார்.

ஹெப்ரோன் பகுதியை பலஸ்தீனத்துக்கு கைமாற்றம் செய்யும் ஒப்பந்தம் கையெழுத்தான பின்பு ஒஸ்லோ ஒப்பந்தத்தின் சரத்துக்கள் தொடர்ந்து பின்பற்றப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

எனினும் ஹெப்ரோன் நகர கைமாற்றம் பற்றிய கருத்து வேறுபாடுகள் முற்றிலுமாக இதுவரை அகற்றப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-10)

## ஜாக்சன் திருமணம்

சிட்னி, நவ. 16

அமெரிக்கப் பாடகர் மைக்கல் ஜாக்சன் மறுமணம் செய்துள்ளார். ஜாகினோ என்னும் 37 வயதுடைய பெண்ணை சிட்னியில் ரகசியமான முறையில் திருமணம் செய்தார். உலக இசைச் சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள மைக்கல் ஜாக்சன் தற்போது ஆஸ்திரேலியாவில் உள்ளார். அவருடன் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருந்த ஜாகினோ கருவுற்றிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. மைக்கல் ஜாக்சனுக்கு இது 2 ஆவது திருமணமாகும். (உ-10)

## ஜெயலலிதா 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராவார்!

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வருமானக் கணக்குகளை வேண்டுமென்றே சமர்ப்பிக்கவில்லை என்ற தொடுக்கப்பட்ட வழக்கில் இம் மாதம் 25 ஆம் திகதி அவர் தவறாமல் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனப் பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கும் 2 ஆவது நீதிமன்றத்தின் கூடுதல் பொருளாதார நீதிமன்ற மஜிஸ்திரே முத்துசாமி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய செல்வி ஜெயலலிதா உடல் நிலை காரணமாக ஆஜராக முடியவில்லை என அவரது வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவை நீதிபதி ஏற்றுக் கொண்டார். (இ.10)

## 18 ஆவது குழந்தையை பெற்ற தாய்!

தெஹிரான், நவ. 16

யெஷ்பெத் அஷாதி என்ற ஈரானியப் பெண் இந்தவாரம் தனது 18 ஆவது குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். அவருக்கு வயது 48. இவர் பெற்ற குழந்தைகளில் 10 பேர் பெண்கள். 8 பேர் ஆண்கள். மூத்த மகளுக்கு வயது 32. அவளுக்கு 10 பேரக் குழந்தைகளும் உள்ளனர். வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த போதிலும் அந்தத்தாய் பூரண உடல் நலத்துடன் இருப்பதாக ஈரானியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (உ-10)

# 351 பேரைப் பலி கொண்ட விபத்துக்கு காரணம் யார்?

## தாம் அல்ல என்கிறது இந்தியா

இந்தியாவில் நடுவானில் இரு விமானங்கள் மோதி 351 பேரைப் பலி கொண்ட விபத்துக்கு காரணம் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பணிமனையின் கவனக் குறைவே என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இக் கூற்றை இந்திய விமானப் போக்கு வரத்து அமைச்சர் முற்றிலும் நிராகரிக்கிறார்.

விமானிகளுக்கும் கட்டுப்பாட்டுப் பணியகத்துக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணையில் இடம்பெற்ற மொழிக் குழப்பமே விபத்துக்குக் காரணம் என மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும் பூரண நீதி விசாரணைக்காக உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை ஒரு மாதத்துக்குள் எதிர் பார்க்கப்படுகிறது. (இ-10)

ஸயரில்

## ஆயுதங்களை களைவதில் அமைதிப்படை ஈடுபடாது

றொறண்டோ, நவ. 16

கலகப் படைகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதோ அல்லது அகதிகள் மத்தியிலிருந்து கலகக் காரர்களைப் பிரித்தெடுப்பதோ ஸயர் செல்லும் அமைதிப்படையின் பணியாக இராது எனக் கனடா தெரிவித்துள்ளது.

ஆனால் எதிரிகள் அமைதிப்படையைத் தாக்காமல் தடுக்க, கனரக ஆயுதங்கள் தேவை ஏற்படின் பயன்படுத்தப்படும் எனவும் கனடா தெரிவித்துள்ளது.

அதே சமயம் —

அமைதிப்படையை அனுப்புவதாயின் ஸயரில் போர் நிறுத்தம் அனுசரிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா வைத்துள்ள நிபந்தனையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸயர் செல்லும் பன்னாட்டு படைக்கு கனடா தலைமை வகிக்க இருப்பது தெரிந்ததே. (இ- 10)

## உலக அரங்கில்

### றோம் மாநாட்டில் தேவகௌடா

றோம், நவ. 16

றோமில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலக உணவு மாநாட்டில் இன்று இந்தியப் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

றோமில் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் தலைவர்களில் இந்தியப் பிரதமர் தேவகௌடா மற்றும் கியூபா நாட்டு அதிபர் பிடல் காஸ்ட்ரோ ஆகியோர் முக்கியமானவர்கள். (இ-10)

# பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் துன்புறுத்தப்படுகின்றனர்!

## வவுனியா முகாம்களில் உள்ளோர் கைதிகளா? அகதிகளா?

வவுனியா நகரில் பாடசாலைகள் மூடப்பட்டு அங்கு அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் நெருக்கடி நிலை தீவிரமடைந்திருக்கின்றது. இடம் பெயர்ந்தவர்கள் வரலாம்; பாஸ் கெடுபிடிகள் நீக்கப்பட்டுள்ளன என்ற அரசாங்கத்தின் அழைப்பையேற்று வவுனியாவுக்குள் படையெடுத்த ஆயிரக்கணக்கான மக்கள் இப்போது கைதிகள் போலத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

''நாங்கள் அகதிகள், எங்களைச் சிறைக் கைதிகள் போல அடைத்து வைத்துள்ளார்கள்'' என வவுனியா சென்ற ஐ.தே.க. தூதுக் குழுவிடம் முகாமில் வைக்கப்படடிருந்தவர்கள் முறையிட்டுள்ளார்கள்.

'ஜனாதிபதியினதும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரினதும் உறுதிமொழிகளை நம்பி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து படையினரின் கட்டுப்பாடடுப் பகுதிக்கு வந்தோம். எமது விருப்பத்துக்கு முரணாக அரசு எம்மைத் தடுத்து வைத்துள்ளது' எனவும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள பதினொரு முகாம்களில் 8,900 பேர் தங்கியுள்ளார்கள். இவர்களில் நானூறுக்கு மேற்பட்டோர் வயதுக் கட்டுப்பாடு காரணமாக இளைஞர் முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டுள்ளார்கள். வவுனியாவிலுள்ள உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்குவதற்கு கூட அவர்களுக்கு அனுமதி இல்லை.

### நோயாளிகளும் முகாமுக்குள்ளே!

சிகிச்சை பெறுவதற்காக வென வந்த நோயாளிகள் கூட முகாம்களை விட்டு வெளியேறி வவுனியா வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இம் முகாம்களில் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. சுகாதார வசதிகள் போதியளவுக்கு இல்லை. குடி தண்ணீர் பற்றாக் குறை நிலவுகின்றது. கழிப்பறைகள் போதியளவு இல்லை. அத்துடன் சுகாதார வசதிகள் இன்றியும் உள்ளன.

இந்த நிலைமைகளில் இம் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பத்து வயதுக்கு உட்பட்ட மூன்று சிறுவர்கள் மரணமடைந்திருக்கின்றனர். கர்ப்பிணிப் பெண் ஒருவர் முகாமிலேயே குழந்தையைப் பெற்றிருக்கின்றார். அதன் பின்பே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்கள், வவுனியாவிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நிரந்தரமாக வசிப்பவர்கள், வெளிநாடு செல்வதற்காக வந்தவர்கள், கடுமையான நோயாளிகள் என பல தரப்பட்டவர்களும் வாரக்கணக்கில் இங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான எந்த வித நியாயமான விளக்கத்தையும் அரசாங்கம் கூறவில்லை. இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றே அரசாங்கம் முன்னர் கூறியது. ஆனால் இவர்களில் எத்தனைபேர் யாழ்ப்பாணம் செல்ல விரும்புவார்கள் என்பது தெரியவில்லை.

பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர்களைத் துன்புறுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இது காணப்படுகின்றது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை அடுத்தமாதம் நடை [illegible] பாடசாலைகள் அகதிமுகாம்களாக்கப் பட்டுள்ளன. இதற்காக வவுனியாவிலுள்ள தமிழ்ப்பாடசாலைகள் மட்டுமே மூடப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

இந்தப்பாடசாலைகளைத் திறக்குமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், மறியல் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை எதற்கும் அரசாங்கம் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. மூடப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டே கிடக்கின்றன. அடைத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் திறந்து விடப்படவில்லை.

''பாஸ்முறை இல்லை எவரும் தாராளமாக வரலாம்'' என ஆசை வார்த்தை கூறி மக்களை அழைத்து அவர்களைத் தடுத்து வைத்திருக்க வேண்டிய நோக்கம் தான் என்ன?

உண்மையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிராந்தியத்தில் காணப்படும் உணவுத்தட்டுப்பாடு காரணமாக பெருமளவு அகதிகள் அரச கட்டுப்பாட்டுக்குள் வரலாம் என அரசாங்கம் எதிர் பார்த்தது.

வன்னிப் பிராந்தியத்துக்கு மாதாந்தம் சுமாராக 2,000 லொறி உணவுப் பொருள்கள் தேவை இதன்படி கடந்த மே மாதத்திலிருந்து அக்டோபர் வரையான காலப்பகுதிக்கு 12,000 லொறி உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் 6, 197 லொறிகள் மட்டுமே அனுப்பப்பட்டன. இதனால் வன்னிப் பகுதியில் பாரிய உணவுப் பிரச்சினை ஏற்பட்டு அகதிகள் வவுனியாவுக்கு இடம்பெயர்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பாஸ் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட போது வவுனியாவுக்குள் பிரவேசித்தவர்களில் அகதிகள் எவரும் இல்லை! அனைவரும் வவுனியாவுக்கோ அல்லது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கோ பிரயாணம் செய்யவந்தவர்கள் தான்.

இந் நாட்டின் பிரஜைகள் எவரும் எங்கும் செல்ல முடியும், குடியிருக்க முடியும் என்ற விதிமுறைக்கு முரணாக இவர்கள் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களாக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மூடப்பட்டு முகாம்களில் உள்ளவர்கள் அனைவரும் தமக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். ★

கைதிகளா? அகதிகளா? என்ற தலைப்பில் 2-11-96 வீரகேசரியில் வெளியான ஆசிரியர் தலையங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ.ஐ.மு வைதேர்தலுக்கு இழுக்க ஐ.தே.க. முயற்சி

## தோற்கடிக்க இதுவே சரியான தருணம் எனக் கருத்து

கொழும்பு, நவ. 16

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை தேர்தல் களத்துக்கு வலிந்துஇழுத்து அதை தோற்கடிக்க ஐ.தே.க ஆலோசித்து வருவதாக கொழும்பு வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த வார ஏடு வெளியிட்ட செய்தியின் விவரம் வருமாறு:-

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத இன்றைய நிலையில் அரசாங்கம் எந்தத் தேர்தலையும் எதிர்நோக்கத் தயாராகவில்லை. இது பிரதான எதிர்கட்சியான ஐ. தே. கவின் கணிப்பு.

இந்தக் கணிப்பின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு வழிசெய்து அரசாங்கத்தை வலிந்து தேர்தல் களத்தில் இறக்கி அதைத் தோற்கடிக்க ஐ. தே. க. ஆலோசனை செய்து வருகிறது.

அரசாங்கம் மூன்றாவது முறையாக உள்ளூராட்சித் தேர்தல்களை பின் போட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி 12 மாநகரசபைகள், 33 நகரசபைகள். 115 பிரதேசசபைகள் ஆகியவற்றுக்கு தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆயினும் தேர்தல் நடத்தப்படவில்லை.

எதிர்வரும் 97 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதிக்கு தேர்தலை அரசு பிற்போட்டுள்ளது

அந்தத் தேர்தல் இப்போதைக்கு இல்லாவிட்டாலும், மாகாணசபைத் தேர்தலுக்கு அரசாங்கத்தை முகம் கொடுக்க வைப்பதற்கு ஐ. தே. க. ஆலோசித்து வருகிறது.

தன்னுடைய ஆட்சியில் உள்ள மாகாண சபைகளில் வடமத்திய மாகாண சபையையும், சப்ரகமுவ மாகாண சபையையும் கலைக்குமாறு அந்த அந்த மாகாண ஆளுநர்களுக்கு மாகாண முதலமைச்சர்கள் ஆலோசனை கூறினால், ஆளுநர் மாகாண சபையை கலைத்தேயாக வேண்டும்.

பின்னர் அரசாங்கம் அவற்றிற்கு புதிதாக தேர்தல் நடத்த வேண்டும். அது தவிர்க்க முடியாதது.

இந்த வகையில் அரசாங்கத்தை மாட்டி வைத்துதோற்கடிப்பதற்கு ஐ. தே. க முனைகிறது.

இந்த இரு மாகாணசபைகளும் முன்னர் கலைக்கப்பட்ட போது அதற்கு எதிராக நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. மாகாண சபைகள் கலைக்கப்பட்டமை சட்ட விரோதம் என உயர்நீதி மன்றமே தீர்ப்பளித்து விட்டது.

இந்த நிலையில் ஐ.தே.க இப்போது தானாகவே இரண்டு மாகாண சபைகளையும் அரசைக்கொண்டு கலைப்பித்து தேர்தல் களத்தில் அரசை இறக்கி மண்கவ்வச் செய்வற்கு விரும்புகிறது— என்று அந்த வார ஏடு தெரிவித்துள்ளது.

(இ-3)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், நவ.16

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி வளவு நேற்று கல்லூரி மாணவர்களால் சிரமதானப்பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது.

(இ-15)

# லலித் அணியினரின் யோசனைகள் தெரிவுக்குழுவால் புறக்கணிப்பாம்!

## அக்கட்சியினர் பெரும் விசனம்

இனப்பிரச்சினை விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தமது கட்சி சமர்பித்த யோசனைகள் தொடர்பாக அரசாங்கம் போதிய சிரத்தை காட்டவில்லை என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

இதேவேளை—

அக்கட்சியின் தலைவியான ஸ்ரீமணி அத்துலத் முதலியின் வசமுள்ள அமைச்சு விவகாரங்களும் மாற்றா மனப்பான்மையுடன் கையாளப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

இலங்கை தொடர்ந்தும் ஒற்றையாட்சி நாடாகப் பேணப்பட வேண்டும் என்றும்—

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக் கூடாது என்றும்—

நாம் முன் வைத்த யோசனைகள் கவனத்தில் எடுக்கப் படவில்லை.

எமது முன்னணி அரசின் ஒரு முக்கிய அங்கமாக இருந்தும் எமது கருத்துக்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அரசாங்கமும் புறக்கணித்து விட்டன— என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)


அடையாள அட்டை கவரிடுதல்

ரூபா 20/- முதல் 50/- வரை

[பாடசாலை — காரியாலயங்களுக்கு விசேட கழிவு உண்டு]

சன்லைட் றைக்கிளீனேர்ஸ்

யாழ்ப்பாணம்.

(43648)

பிள்ளையார் அப்பளப் பாவனையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

பிள்ளையார் லேபலில் போலி அப்பளம் விற்பனையாகிறபடியால், பிள்ளையார் அப்பளம் வாங்கும் பொழுது, லேபலில் கீழே உள்ள விலாசம் இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

வே. கோபாலன்,
பிள்ளையார் இன்டஸ்ரீஸ்,
148, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(8976)


## ஓராண்டு நினைவினிலே



மண்ணில்: 14 — 03 — 1936

விண்ணில்: 29 — 10 — 1995

### திருமதி பழனிவேல் மாரிமுத்து

உயிர்காக்க ஓடினாய் ஊரை விட்டு
உயிர் துறந்தாய் எம்மை தவிக்க விட்டு
ஆதரவளித்த உந்தன் அன்புக்குரிய
சிவபாக்கியம் சிவ சீலனுடன்
அன்று உயிர் நீத்த அத்தனை உயிர்களுக்கும்
என்றும் எமது இதய அஞ்சலி

துயரால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கட்டப்பிராய்,
கோப்பாய்.

(43669)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 08 — 09 — 1932

விண்ணில்: 17 — 11 — 1995

### அமரர் சின்னையா ஜேகன்

(தோலகட்டி, வசாவிளான்)

தந்தையே!
பட்ட மரம் தளிர் விட்டது போல்
பாலைவனம் பசுஞ்சோலை ஆனது போல்
இருண்ட எம் வாழ்வில் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்கு சென்றீர்கள்?
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

அன்னாரின் மறைவின் போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் நாளை (17-11-96) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(8975)

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்





செல்வி
**வினுஜினி இராசகுமார்**
(மரு. இராமநாதன் கல்லூரி ஆண்டு 9 மாணவி)

திருமதி
**இராசகுமார் சந்திரா**

13 — 11 — 1981 < மலர்வு > 10 — 07 — 1959
29 — 10 — 1995 < உதிர்வு > 29 — 10 — 1995
திதி: — 16 — 11 — 1996

அந்த நாள்... எங்கள்
வாழ்க்கையில் கருமை படர்ந்த நாள்
அந்தக் கணம்... எங்கள் இதயங்கள்
சல்லடை போட்ட கணம் - அன்று
காற்றோடு காற்றாக வந்த காலன் கவர்ந்திட
நீங்கள்... நீண்ட தூரம் போய்விட்டீர்கள்
ஆனால்... யார் அறிவீர்கள்?
நாங்கள்... எங்கள் சோகங்களை...

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்.

ஆ. தங்கராசா,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்.

[43662]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஆயுதங்கள் களைந்தது இனவாதிகளுக்கு கிடைத்த வெற்றி!

## தமிழ் அமைப்புக்களுக்கு இக்கட்டான நிலை

தமிழ் அமைப்புக்களிடம் உள்ள ஆயுதங்களை களைந்துவிட வேண்டும் என்று பௌத்த மதகுருமார் சிலர் உட்பட, கிழக்கு சிங்கள முன்னணி என்று புதிதாக முளைத்துள்ள ஒரு அமைப்பும் கோரிக்கை எழுப்பியிருக்கிறது.

அக்கோரிக்கையை அரசாங்கமும் ஓரளவுக்கு செவிமடுத்துள்ளது என்றுதான் தெரிகிறது.

மட்டக்களப்பிலும், திருமலையிலும் புளொட், ரெலோ அமைப்புக்களிடம் ஆயுதங்கள் மீவப்பெறப்பட்டுள்ளன.

### 2 நோக்கங்கள்

புலிகள் தவிர்ந்த தமிழ் கட்சிகளின் நடவடிக்கைகளை இரண்டு விதமாக நோக்க வேண்டும்.

ஒன்று: அரசியல் கட்சிகள் என்ற வகையில் அவற்றின் செயற்பாடுகள்.

இரண்டு: தமது நிதித் தேவைக்காக பொதுமக்களிடம் பலாத்காரமாக நிதி திரட்டும் நடவடிக்கைகள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரில் முஸ்லிம் ஒருவரிடம் நிதி வாங்க ரெலோ இயக்கம் முயற்சி செய்தது. இறுதியில் அந்த முஸ்லிம் கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ரெலோ உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். ஆயுதங்களும் மீளப்பெறப்பட்டன.

இதேபோல மட்டக்களப்பில் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக புளொட் உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு இயக்கத்துக்கும் தமது உறுப்பினர்களை பராமரிக்க நிதித் தேவை இருக்கிறது.

இன்று ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ள சகல தமிழ் கட்சிகளும் முன்னர் ஆயுதம் ஏந்திய இயக்கங்களாக இருந்த போது பல்வேறு வழிமுறைகளில் நிதி திரட்டலில் ஈடுபட்டவைதான்.

எப்படி நிதி பெறுகிறோம் என்பது முக்கியமல்ல, பெறும் நிதியை எதற்காகப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம் என்று நியாயம் சொல்லப்பட்டே நிதி திரட்டல்கள் நடந்தன.

இதற்கு புலிகள் இயக்கத்தினரும் விதிவிலக்கல்ல.

ஆனால் இப்போது புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டுள்ளன. ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளதாகக் கூறிகின்றன.

இந்நிலையில் முன்னர் நிதி திரட்ட சொல்லப்பட்ட காரணங்கள் பல இல்லாமல் போய்விட்டன.

ஆயுதங்கள் வாங்கிச் சேகரிக்க வேண்டும்.

ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்த்து பராமரிக்க வேண்டும்; சர்வதேச ரீதியாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இதற்கெல்லாம் உண்டியல் குலுக்கியா பணம் சேர்க்க முடியும்? என்ற கேள்விக்கு இடமில்லாமல் போய் விட்டது.

> கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார சஞ்சிகையில் "கிழக்கில் ஆயுதக் களைவுகள்" என்ற தலைப்பில் "நாரதர்" எழுதிய "எக்ஸ்ரே ரிப்போர்ட்" இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அவ்வாறான கேள்வியை எழுப்ப முடியாத நிலைக்கு வந்துவிட்டன.

எனினும் சில இயக்கங்கள் தற்போதும் பரவலான நிதி திரட்டலில் பலாத்காரமான முறையில் ஈடுபடவே செய்கின்றன.

அதிலும் சாதாரண பொது மக்களிடமும் மிரட்டிப் பணம் பறிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளையிட்டு பொலிசாராலோ பாதுகாப்புப் படையினராலோ மேற் கொள்ளும் சட்ட நடவடிக்கைகளைத் தமிழ் அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளாகச் சித்திரிக்க முற்படுவது சரியாக இருக்காது.

ஆனால் சமீபகாலமாக இனவாத அமைப்புக்களும் சில பௌத்த குருமார்களும் தமிழ் அமைப்புக்களின் ஆயுதங்களை பறிக்குமாறு விடுக்கும் கோரிக்கைகளை, தமிழ் இயக்கங்கள் சிலவற்றின் நிதி திரட்டல் நடவடிக்கைகளையும் முடிச்சுப் போட முடியவில்லை.

கிழக்கில்உள்ள சிங்கள மக்களுக்கு ஆபத்து என்ற அடிப்படையில் தான் பௌத்தகுருமார்கள் சிலர் கோரிக்கை விட்டுள்ளனர்.

ஒரு விடயத்தை இதில் கவனிக்கவேண்டும். வடக்கு—கிழக்கிலோ வெளியிலோ தமிழ் கட்சிகள் எதுவும் இது வரை சிங்கள மக்களிடம் நிதி திரட்டலில் ஈடுபட்டதில்லை. அவர்களை அச்சுறுத்தியதும் இல்லை.

அதே போல தமிழ் கட்சிகள் தமிழ் மக்களிடம் எப்படி நடந்து கொள்கின்றன என்பது தொடர்பாக சிங்கள இனவாத அமைப்புக்கள் கவலைப்பட்டதும் இல்லை.

### திருமலை சம்பவம்

ஆனால் சமீபத்தில் திருமலையில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான் இனவாத அமைப்புக்களை சீற்றம் கொள்ள வைத்துள்ளது.

திருமலையில் காணி அதிகாரியான பீரிஸ் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னரும் திருமலையில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. அப்போதெல்லாம் எழாத சீற்றம் பீரிஸ் கொலைக்குப் பின்னர் சீறி எழுந்தது.

காரணம் பீரிஸ்தான் திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு மூளையாக செயற்பட்டுக் கொண்டிருந்தவர்.

எந்தக் காணியை எப்படி வளைத்துப் போடலாம் எங்கே எப்படி குடியேற்றம் நடத்தலாம் என்பதெல்லாம் பீரிஸுக்கு அத்துப்படி.

ஆனாலும் பீரிஸ் ஒரு அம்பு மட்டும்தான். திருமலையில் தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரத்தை குறைப்பது என்பது நீண்டகால பேரினவாதத் திட்டம். அந்தத் திட்டத்தால் ஏவப்பட்ட ஒரு அம்புதான் பீரிஸ்.

தமது அம்புகளில் ஒன்று இலக்கை பூரணமாக எட்ட முன்னர் விழுந்து விட்டதே என்பதுதான் இனவாத அமைப்புக்களது வருத்தம்.

அந்த வருத்தம் திருமலையில் உள்ள தமிழ் அமைப்புக்கள் மீதான கோபமாகத் திரும்பியிருக்கிறது; குறிப்பாக பீரிஸ் கொலைக்கு ஈ. பி. டி; பி. மீதுதான் இனவாத அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

திருமலை சிங்கள மக்களின் பாரம்பரிய பூமி போலவும், அங்கே தமிழ் அமைப்புக்கள் இப்படி கொட்டமடிப்பது நியாயமா? என்பது போலவும் இனவாத அமைப்புக்கள் வரிந்து கட்டிக்கொண்டு எழுந்துள்ளன.

திருமலையில் திட்டமிட்ட குடியேற்றம் என்பதை மையமாக வைத்தே அதற்குள்ள தடைகளை விலக்கும் நோக்கத்தில் இனவாத அமைப்புக்கள் தமிழ் கட்சிகளை குறி வைத்துள்ளன.

பீரில் யாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதைக் கண்டறிய வேண்டியது பாதுகாப்புப் படையினரின் பொறுப்பு அதற்கு மாறாக தமிழ் கட்சிகளை நாம் ஒன்றும் சந்தேகப்படாமல் இருக்கவில்லை என்று காட்டுவது போலவே திருமலையில் படையினரும் பொலிசாரும் நடந்து கொண்டனர்.

### வெள்ளை வானும் நீல நிற பஸ்ஸும்

திருமலையில் ரெலோ, புளொட் இயக்கங்களின் ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன. இத்தனைக்கும் திருமலை நகரில் உள்ள தமிழ் இயக்கங்கள் எதுவுமே அங்கு நிதி திரட்டல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான முறைப்பாடுகள் எதுவுமே எழவில்லை.

அதுமட்டுமல்ல ரெலோ, புளொட் இயக்க உறுப்பினர்கள் திருமலையில் படையினருடன் இணைந்தும் செயற்பட்டார்கள்.

சிங்கள மக்களின் பீதியைப் போக்கவே ஆயுதங்கள் எடுக்கப்பட்டதாகக் காரணம் கூறப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இயக்கங்கள் மட்டுமல்ல படையினரும் ஆயுதங்களுடன் திரிகின்றனர். திருமலையில் வெள்ளை வான் பீதி தமிழ் மக்களை தூங்கவிடாமல் துரத்துகிறது.

நீலநிற பஸ் ஒன்றில் திருமலையில் நடமாடும் பொலிசாரின் நடவடிக்கைகள் தமிழ் மக்களைப் பீதி கொள்ளச் செய்கின்றன.

அதற்காக பொலீசாரும் படையினரும் ஆயுதங்கள் இல்லாமல் நடமாடவேண்டும் என்று தமிழ் கட்சிகள் கோர முடியுமா?

படையினர் புலிகளிடமிருந்து எதிர்நோக்கும் அதே அச்சுறுத்தல் தமக்கும் இருப்பதாக தமிழ் கட்சிகள் வாதிடுகின்றன.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமிழ் கட்சிகளின் உதவியையும் அரசாங்கமும் படையினரும் பயன்படுத்தியும் உள்ளனர்.

இப்போது இனவாத அமைப்புகளின் கோரிக்கைகளை செவிமடுத்து தமிழ் அமைப்புக்களை நிராயுதபாணியாக்கியுள்ளனர் படையினர்.

தமிழ் கட்சிகளின் நிலையும் பரிதாபம்தான்.

தமிழ் கட்சிகள் சில இனப் பிரச்சனைத் தீர்வுக்கு புலிகளுடன் தான் அரசாங்கம்பேச வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுக்கின்றன. இதன் அர்த்தம் புலிகள்தான் தமிழ் மக்களின் பலமான பிரதிநிதிகள் என்பதுதான். அதேசமயம் படையினருடன் இணைந்து புலிகளுக்கு எதிரான போரிலும் உதவுகின்றன.

"போர் நிறுத்தம் வேண்டும், அரசே! போரை நிறுத்து!" என்று பத்திரிகைகளில் அறிக்கை விடுக்கிறார்கள். களத்தில் படையினருடன் இணைந்து புலி வேட்டைக்குப் போகிறார்கள்.

தமிழ் கட்சிகள் பல ரொம்பத்தான் குழம்பிப் போயிருக்கின்றன. அவர்கள் குழம்புவது போதாது என்று அரசாங்கமும் தமிழ் கட்சிகளைக் கையாளும் விடயத்தில் குழம்பிப் போயிருக்கிறது.

அரசாங்கத்தின் குழப்பத்துக்கு காரணம் இருக்கிறது இனவாதிகளையும் திருப்தி செய்ய வேண்டும். புலிகளுக்கு எதிரான போரில் தமிழ் கட்சிகள் தமது பக்கம் இருப்பதாக வெளியுலகுக்குக் காட்டவும் வேண்டும்.

முன்னர் இனவாதிகளின் கூக்குரல்களால் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இப்போது தமிழ் அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்கள் களைந்தெறியப்படுகின்றன.

எப்போதுமே இனவாதிகளின் குரலுக்கு மதிப்பு அதிகம் இலங்கையின் அரசியலில் மாறாத விதி அது ஒன்று தான்.

★

## மட்டு. ஆலய புனரமைப்பு: நேபாள அரசு உதவும்

மட்டக்களப்பு, நவ. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதமடைந்துள்ள இந்து ஆலயங்கள் நேபாள அரசின் உதவியுடன் புனரமைக்கப்படவிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராசா அண்மையில் நேபாள தூதுவரைச் சந்தித்து கேட்டுக் கொண்டதன் பயனாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 83 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வரும் அசம்பாவிதங்கள் காரணமாக பெரும்பாலான இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. இந்த ஆலயங்களை புனரமைக்க உலகில் உள்ள இந்து இராச்சியமான நேபாளம் உதவ வேண்டும் என்று அவர் நேபாளத் தூதுவர் நிலாம்பர் அக்காறியாவை நேரில் கேட்டுக் கொண்டார்.

இப்புனரமைப்புப் பணியை மேற்கொள்ளவதற்காக அப்பகுதியில் இயங்கும் ஒரு தொண்டர் அமைப்பினை சிபார்சு செய்தால் அதன் ஊடாக உதவிகளைப் பெற்றுத்தரலாம் என நேபாள தூதுவர் பதில் அளித்தார்.

## குரு நகரில் கொல்களம்

யாழ். மாநகர சபையின் தற்காலிக கொல்களம் இன்று முதல் குருநகர் பகுதியில் இயங்க உள்ளது.

அனுமதி பெற்ற மாட்டிறைச்சிக்கடைக்காரர்கள் குருநகர் கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள இக்கொல்களத்தில், அறுவை செய்யும் மாடுகளை பரிசோதனைப் பார்வைக்காக 24மணி நேரத்துக்கு முன் கட்டிவைக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பிரபாவுடன் பேச்சு நடத்தாமலே பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

### ஸ்ரீமனி அத்துலத்முதலி கூறுகிறார்

கொழும்பு, நவ. 16

தமிழீழவிடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தாமலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அவர்கள் பயங்கரவாதிகள்:

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவியும் போக்குவரத்து, சூழல், மகளிர் விவகார அமைச்சருமான திருமதி ஸ்ரீமனி அத்துலத்முதலி கொழும்பில் இருந்து வெளிவரும் நவமணி பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமனி அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாட்டுத் தலையீடு இருக்கக் கூடாது: எமது உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்க்க வேண்டும்.

ராஜீவ்காந்தி படுகொலையின் பின் இந்தியா, இலங்கை விவகாரங்களில் தலையிடாது என்று நம்புகிறேன்.

அரசின் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதுகஷ்டம்இதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து இறுதிநேரத்திலேயே எனது கட்சி முடிவு செய்யும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-150)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

வவுனியா, நவ. 16

ஆங்கில தராதர பத்திர பயிற்சிக்கும், சிரேஷ்ட ஆங்கில தராதர பயிற்சிக்கும் மாணவர்களைத் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை வவுனியா இணைந்த பல்கலைக்கழகம் கோரியுள்ளது என்று மேற்படி பல்கலைக்கழகத் தலைவர் மா. செ. மூக்கையா தெரிவித்தார்.

வவுனியாவில் வசிக்கும் மற்றும் தொழில் புரியும் இளைஞர், யுவதிகள் நன்மை கருதி ஆரம்பிக்கப்படும் இப்பயிற்சி நெறிக்கு இம் மாதம் 25 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1½Kg விற்கு மேற்பட்ட நிறையுடைய இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. முகவரிகள்: R.S.K கோழிப் பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி), R.S.K கோழிப் பண்ணை, தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய். (விதானை வளவு, மானிப்பாய்)
(43614)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இயங்கி வந்த சில்லாலை— Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் மருத்தெண்ணெய் களஞ்சியம், 70/2 பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்திற்கு இடம் மாறியுள்ளதை அறியத்தருகிறோம். திருமதி கமலினி றஞ்சன். (43634)

### தவறிவிட்டன

கணபதி இராசையா ஆகிய எனது 352260860 V இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், பாசும் யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். த. தனபாலசிங்கம், நெடுங்குளம் சந்தி, அரியாலை உதயன் முகவர்.
(43659)

### ஓகன் வகுப்பு

ஓகன், புல்லாங்குழல், கிற்றார் இவ்வகுப்புகள் வார நாள்களில் மாலை 2 மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி: 238, கோயில் வீதி, நல்லூர். (ஆலயத்தில் இருந்து 300 யார் தெற்கே).
(43513)

### திருமணசேவை

நீங்கள் எதிர்பார்க்கும் மணமக்களுக்கு தகுதியும் நம்பகமுமான சேவை, விவாகப் பொருத்தத்துக்கான குறிப்புகள், தகவல்கள் வழங்கும் சேவையாகும். யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (பலாலி பருத்தித்துறை வீதிகளின் சந்திப்புக்கருகில்.
(43665)

### இலவச திருமண சேவை

31 வயது G. S., 30 வயது அரசாங்க பாதுகாப்பு உத்தியோகத்தர், 28 வயது கனடா (சைவ போசனம் விரும்பத்தக்கது) மணமக்களுக்கு மணப்பெண்கள் தேவை. ஞாயிறு மட்டும் 9.30–12.30 ஸ்ரீ லங்கா அச்சகத்திற்கு அருகில் யாழ்ப்பாணம்.
(43660)

### மாறிவிட்டது

05 – 11 – 96 செவ்வாய்க்கிழமை சின்னக் கடையில் எனது லுமாலா சைகிளை மாறி எடுத்துச் சென்றவர் இல: 24, 5ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு சைக்கிளை மாற்றி எடுத்துச் செல்லுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன் —லோ. நிமலன்
(43670)

### கணிதம், ஆங்கிலம்

O/L Distinction, Credit பெறுபேறுடைய தினமும் இரண்டு மணித்தியாலங்கள் (Paper Class உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி.
(43671)

## ஓராண்டு நினைவஞ்சலி

**கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**
(சோதி)
(இளைப்பாறிய பொலீஸ் அதிபர் 7575)

தோற்றம்: 06 - 12 - 1937
மறைவு: 16 - 11 - 1995

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், இடம் பெயர்ந்து சென்ற போது பளையில் காலமானார். இவர் தவலட்சுமியின் அன்புக் கணவரும், தவமன்னன், மோகனா, புவிச்செல்வன், நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லையம்பலம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, ஆகியோரின் சகோதரனும், தில்லையம்பலம். ஆறுப்பிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஓராண்டு சென்றும் எம் உள்ளத்தில் என்றும் ஒளிவிளக்காய் இருக்கின்றீர்.

உம் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்

தகவல்:
திருமதி பரமேஸ்வரி தில்லையம்பலம் (சகோதரி)
நாத்துப் பிலாவடி,
அளவெட்டி வடக்கு.
(43576)

## 1-ம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்: 26 — 06 — 1956
மறைவு: 27 — 11 — 1995


**மோகனதாஸ் கிருஷ்ணாதேவி**

இன்று (16-11-96) அன்னாரின் இல்லத்தில் நிகழும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செ. மோகனதாஸ் (கணவன்),
பிள்ளைகள், தாய், சகோதரிகள்,
பெறாமக்கள் மற்றும் உறவினர்கள்,
நண்பர்கள்.

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.
(43647)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கதிரவேலு ஆறுமுகம்**
(புங்குடுதீவு - 5)

மலர்வு: 10–10–1917
உதிர்வு: 27–11–1995
திதி: 16–11–1996

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வை வாழ்விடமாகவும் கொண்டிருந்த எங்கள் குடும்பம் இடம் பெயர்வால் அல்லலுற்று சாவகச்சேரி கல்வயலில் வாழ்ந்த போது ஏற்பட்ட இத்துயரச் சம்பவம் என்றும் எங்கள் மனதை விட்டு அகலாமல் நிலைத்து விட்டது.

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மைப் பாசமுடன் வழிநடத்திய அன்புத்தெய்வமாகிய ஐயா!

ஆண்டு ஒன்று மறைந்தாலும் எம் உயிர் உள்ள வரை உங்களை மறவோம். உங்களது முதலாவது ஆண்டுத் திதியான இன்று தங்கள் ஆத்மா சாந்தியுறும் வண்ணம் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

நன்றி

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
ஆ. சாந்தலிங்கம் (மகன்)
12/3 சந்தனமாத லேன்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(43605)

## ஐந்தாண்டு நினைவஞ்சலி
16 - 11 - 1996



**உடுவில்- மு. நமசிவாயம்**
(இளைப்பாறிய அதிபர்)

## ஓராண்டு நினைவஞ்சலி
16 - 11 - 1996



**திருமதி ந. தனலட்சுமி**

அல்லும் பகலும் எம் உயர்வுக்காய் உழைத்திட்ட எம் அன்புத் தெய்வங்களை உயிர் உள்ளவரை பிரார்த்திப்போமாக!

மக்கள், மருமக்கள், சோதரன், பேரப்பிள்ளைகள்.

மல்வம்,
உடுவில்.
(43664)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்பு சிறந்த தீர்வாக அமையும்

## அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

''அதிகாரப் பரவலாக்கலுக்கு வடக்கு—கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்பட்டு ஒரே அலகாக இருக்க வேண்டும். அதுவே சிறந்த தீர்வாக அமையும்.''

இப்படி கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் இந்திக குணவர்த்தன கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகு பற்றித் தீர்மானிப்பதற்கு வரலாற்று ரீதியான பார்வை தேவை.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்காவும், அதன் பின் கண்டிப் பிரதானிகளும் சமஷ்டி அமைப்பை விதந்துரைத்த நேரத்தில் மூன்று அலகுகளைச் சிபார்சு செய்தனர்.

இலங்கையின் கரையோரப் பகுதிகள் ஒரு அலகாகவும்—

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வேறொரு அலகாகவும்—

மலைநாட்டுப் பகுதிகள் இன்னொரு அலகாகவும்—

இருக்க வேண்டும் என்று விரும்பினர்.

அது மிகவும் விரும்பத்தக்கது. ஆனால் இன்று யதார்த்தம் எவ்வளவோ மாறி விட்டது.

குடியேற்றவாத நாடுகள் இலங்கையில் காலடி வைத்த போது மூன்று பிரதான இராச்சியங்களே இருந்தன.

இப்போது இருக்கும் மாகாண எல்லைகள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் அவர்களது தேவைக்காக நிர்ணயிக்கப்பட்டவை.

ஒரு குறிப்பிட்ட கால யதார்த்த நிலைமைக்கு ஏற்றவாறாகவே எல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

சுதந்திரத்துக்குப் பின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்களின் மூலம் சிங்கள விரிவாக்கல் நடவடிக்கைகள் செயற்பாட்டுக்கு வந்தன.

இதனால் அம் மாகாணங்களில்— குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரம் தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமான முறையில் மாற்றமடைந்தது.

அத்தோடு, தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பகுதிகளின் தொடர்ச்சித் தன்மையை இல்லாமற் செய்யும் நடவடிக்கைகளும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன.

அது மட்டுமன்றி தமிழ் பேசும் மக்களிடையே வேறுபாட்டுணர்வைத் தோற்றுவித்து வளர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு - கிழக்கு என்ற பேதம் வளர்க்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விடயங்களைக் கவனத்துக்கெடுத்துப் பார்க்கும்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகள் தேவைக்கேற்றவாறு மீள் நிர்ணயம் செய்யப்பட்டு அவை இரண்டும் ஒரே அலகாக இருப்பதே சிறந்த தீர்வாக அமையும்.

இப்படி அமைச்சர் இந்திக குணவர்த்தன கூறினார். ((-இ3)

## ஜெயலலிதா மீது மற்றொரு வழக்கு

டான்ஸி நில பேர ஊழல் வழக்கில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, திருமதி சசிகலா நடராஜன் ஆகியோருக்கு எதிராக தமிழக காவல்துறைநேற்றுகுற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

முதன்மை அமர்வு நீதிபதி ஏ. ராமமூர்த்தி முன் இக்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது டான்ஸி நிறுவனத்துக்கு சொந்தமான மூன்றே முக்கால் ஏக்கர் நிலத்தை வாங்குவதில் செல்வி ஜெயலலிதாவுக்கு மூன்றரைக் கோடி இலாபம் கிடைப்பதற்கு குற்றச் சதியில் ஈடுபட்டதாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நாவற்குழிச் சம்பவம்:

# அதிர்ச்சி தெரிவித்து இந்துப் பேரவை கடிதம்

யாழ்ப்பாணம், நாவற்குழி மற்றும் இடங்களில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக அதிர்ச்சியும், கண்டனமும் தெரிவித்து இலங்கை இந்துப்பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்காலத்தில் அத்தகைய கொடூரச் சம்பவங்கள் இடம் பெறாத வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட மற்றும் சில விடயங்கள் வருமாறு:-

★ இளைஞர்கள் காணாமற் போவது, முறை கேடாக பெண்கள் இம்சைக்குள்ளாகுதல் உட்பட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் போன்ற விவகாரங்கள் இடம் பெறாத வகையில் சம்பந்தப்பட்ட இடங்களில் அமைக்கப்படும் மனித உரிமைகள் செயல காரியாலயங்கள் பங்களிப்பு புரிய முடியும்.

★ படைப் பிரிவைச் சேர்ந்தோர் குற்றம் புரியுமிடத்து எதுவித தாமதமுமின்றி அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

★ இந்த வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை விவரங்கள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் மூலம் உரியவாறு வெளிப்படுத்தப்பட வேண்டும்

★ அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கப்படும் பட்சத்தில் தமது தண்டனைக் காலத்தை முழுமையாக அவர்கள் முடிப்பதற்கு முன்னர் மன்னிப்போ, விடுதலையோ வழங்கப்படக் கூடாது. (இ-3)

## உதயன்

## விரியும் விரிசல்

இலங்கையில் தமிழ் மக்கள் எங்கிருந்தாலும் துன்பங்களையும் கஷ்டங்களையும் அவலங்களையும் அனுபவிக்கும் நிலை தொடரவே செய்கிறது. போர் நடைபெறும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மட்டுமன்றி, அதற்கு அப்பால் உள்ள பகுதிகளிலும் தமிழர்கள் நிம்மதியாக வாழ இயலாத நிலையே உண்டு.

கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிரதேசங்களில் இருந்து வவுனியா செல்லும் தமிழர்கள், சிறைக் கூடங்களில் அடைத்து வைக்கப்படுவது போல, முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

இவர்களில் இளம் வயதினர் வேண்டாத தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்கள் தமது பெற்றோர்களுடன் இணையவோ அன்றி தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி மீளக் குடியமரவோ அல்லது தமது எதிர்கால நன்மை கருதி வெளிநாடுகளுக்குச் செல்லவோ அனுமதிக்கப்படாமல் மாதக் கணக்காக வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

அதே போன்று, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்பவர்கள் விடுதிகளில் தங்குவதாயின், மூன்று நாள்களுக்கு மேல் அவற்றில் வாசம் செய்ய முடியாது என்று பொலிஸார் தடை உத்தரவு போட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான கப்பல், விமானப் போக்குவரத்துச் சேவைகளுக்கு பயணச்சீட்டுப் பெறுவது பெரும் சோதனையும், வேதனையும், அலைச்சலும் நிறைந்த அலுவல். சொர்க்கத்துக்குப் போவதற்கு சீட்டுக் கிடைத்தாலும் கிடைக்கலாம்; யாழ். கொழும்பு, கொழும்பு-யாழ். பயணத்துக்கு கப்பல், விமானப் பயணச்சீட்டுப் பெறுவது பெரும்பாடாக உள்ளது.

இத்தகைய ஒரு நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்பவர்கள்—உறவினர்களின் வீடுகளில் தங்குவதற்கு வசதி இல்லாமல் விடுதிகளில் தங்குபவர்கள்— மூன்று நாள்களில் எவ்வாறு தமது அலுவல்களை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்ப முடியும்?

தமிழர்கள் என்றால் அவர்களை எதுவும் செய்யலாம்; எப்படியும் துன்புறுத்தலாம்; எல்லா வகைகளாலும் கஷ்டப்படுத்தலாம்; என்னென்ன விதமான கட்டுப்பாடுகளையும் விதிக்கலாம்; எந்தெந்தத் தடைகளையும் போடலாம் என்ற எண்ணம் அரச அதிகாரிகளின் மனங்களில் விரவி ஆழப்பதிந்து விட்டது.

தாங்கள் செய்யும் அநியாயங்கள், அடக்கு முறைகளை எல்லாம் பாதுகாப்புக் காரணங்கள் என்ற முத்திரையுடன் அதிகாரிகள் அமுலாக்குகின்றனர்.

சிங்கள மக்களைப் போலவே தமிழர்களும் உரிமைகளுடன், சமத்துவமாகவும் நிம்மதியாகவும் வாழ வழி செய்வதே தமது நோக்கம் என்று ஜனாதிபதி மேடைகளில் கூறிவந்த போதிலும், அதிகாரிகள் அதற்கு நேர்மாறாகவே நடந்து கொள்கிறார்கள்.

இதற்கு முன்னர் ஆட்சி செய்த கொழும்பு அரசுகளுக்கும் இப்போதைய அரசுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. அவற்றைவிட இது அடக்கு முறையும் கெடுபிடியும் மிக்கது என்று தமிழ் மக்கள் எண்ணுமளவுக்கு அரசுக்கும் அவர்களுக்கும் உள்ள இடைவெளி மேலும் விரிசலாக்கப்படுமளவுக்கே அலுவல்கள் நடக்கின்றன. இது விரும்பத்தக்கதல்ல.

# கார்த்திகை பெண்களும் கந்தவேளும்

சப்த ரிஷிகள் எனப்படுபவர்கள் அத்திரி, மரீசி, ஆங்கிரசர், புலத்தியர், புலகர், வசிட்டர், கிரது ஆகியோர். இவர்களின் பத்தினிகளான சப்த மாதர் மகா பதிவிரதைகள். கார்த்திகைப் பெண்கள் என்று அழைக்கப்படுபவர்களும்இவர்களே. இந்தப்பதிவிரதைகளின் அழகில் மோகமுற்ற அக்கினி தேவன், அவர்களை அடைந்து இன்புற விரும்பினான்.

அக்கினி தேவனுடைய மனைவி ''ஸ்வாஹா'' இதை அறிந்தாள். பதிவிரதைகளின் கற்புக்கனல் தனது கணவனான அக்கினி தேவனையே தகிக்கும் சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்து மிகவும் கலக்கமுற்றாள்.

எப்படியும் கணவனை ரிஷி பத்தினிகளின் சாபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் எனத் தீர்மானித்து, சப்த்த ரிஷிகளின் மனைவியர் போன்று, நாளுக்கு ஒரு பத்தினி உருவம் எடுத்து அக்கினி தேவனின் ஆவலைப் பூர்த்தி செய்து வந்தாள்.

இறுதியில் வசிட்ட முனிவரின் பத்தினியான அருந்ததி உருவம் எடுக்க முயன்று, முடியாமல் போயிற்று அருந்ததியைக் காணாத அக்கினி தேவன் நேரே அவளிடம் சென்று சாபம் பெற்றான்.

இந்தச் செய்தியை அறிந்த மற்ற பத்தினிகளின் கணவர்களான ஆறு ரிஷிகளும் ஒன்று கூடி, அக்கினியின் மனைவி தங்கள் பத்தினிகளின் உருவம் எடுக்க முடிந்தது. ஆனால் அருந்ததியின் உருவம் மட்டும் எடுக்க முடியாமற் போயிற்று என்றால், தமது பத்தினிகள் அருந்ததியை விடப் பத்தினித் தன்மையிற் குறைந்தவர்கள் ஆயினர் எனச் சிந்தித்து அந்தக் குறையைப் போக்குவதற்குத் தீர்மானித்தனர்.

ரிஷிகள், பத்தினிகளை அழைத்து ''நீங்கள் அறுவரும் சரவணப் பொய்கையில் சிவகுமாரராகத் தோன்றப் போகும் முருகனுக்குப் பாலூட்டி வளர்த்து அவருடைய திருமேனியின் ஸ்பரிசம் பட்டுப் புனிதராகி வாருங்கள்'' என்று கட்டளையிட்டுப் பூவுலகுக்குச் செல்லும்படி விடை கொடுத்தனர்.

கணவர்களைப் பிரிய மனம் இல்லாத ரிஷி பத்தினிகள் கவலையுடன் தயங்கினர். ''பத்தினிகளே கவலையடையாதீர்கள் முருகனை அணைப்பதால் நீங்கள் புனிதராவீர்கள். அதுமட்டுமன்றி அருந்ததியை விட மேலான புகழும் உங்களை வந்தடையும்.

### கந்த சஷ்டி சிந்தனை 6



சென்று வாருங்கள்'' என்றனர்.

திரி காலமும் தெரிந்த ரிஷிகளின் வார்த்தைளால் கவலையும் தயக்கமும் நீங்கிய கார்த்திகைப் பெண்கள் பூவுலகுக்கு வந்து சரவணப் பொய்கைக் கரையில் முருகனின் அவதாரத்தை எதிர்பார்த்துத் தவமிருந்தனர்.

சிவபிரானின் நெற்றிக் கண்களினின்றும் தோன்றிய ஆறு அக்கினிப் பொறிகளை வாயுவும், தேயுவும், கங்கையும் சரவணப் பொய்கையில் சேர்த்தனர். அவை சோதிப் பிழம்பே திருமேனியான ஒரு உருவாகி, ஆறு திருமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்ட குழந்தையாகித் தாமரை மலரில் தவழ்ந்தது.

மாதர் அறுவரும் ஆறு முகம் கொண்டு ஒரு உருவாக விளங்கும் குழந்தையை யார் எடுப்பது என்று அறியாது துதிசெய்து வணங்கிநின்றனர். [illegible] அருள் புரியத் திருவுளங் கொண்ட ஆறுமுக வேள் ஒருவரே, ஆறுகுழந்தைகளாகப் பிரிந்து ஆறு தாமரை மலர்களில் வீற்றிருந்தார்.

தமது வேண்டுதலுக்கு இரங்கிய கந்தவேளின் கருணையை வியந்த கார்த்திகை மாதர் அறுவரும் ஆளுக்கு ஒரு குழந்தையை எடுத்துத் தழுவி, அன்புடன் அணைத்துப் பாலூட்டி வளர்த்துப் புனிதராயினர்.

ஒரு தினம் சரவணப் பொய்கைக்கு அம்பிகையுடன் எழுந்தருளிய சிவபிரான், கார்த்திகைப் பெண்களை நோக்கி ''நம் புதல்வனை நீவிர் அன்புடன் பாலூட்டி வளர்த்தமையினால், அவலுக்குக் கார்த்திகேயன் என்னும் திருநாமம் வழங்குவதாக. உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடிகளை அன்புடன் வழிபாடுவோருக்கு, நாம் இகபர நலன்களை அருளுவோம்'' என்று வரம் கொடுத்து அவர்களை விண்ணுக்கு ஏகுமாறு விடை கொடுத்தருளினார்.

''கந்தன் தனை நீர் போற்றிய கடனால் இவன் உங்கள் மைந்தன் எனும் பெயராகுக, மகிழ்வால் எவரேனும் நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றான் வழிபடுவோர் தந்தம் குறை முடித்ததே, பரந்தனை நல்வம்'' என்றான்.

– முளாய் அருணாசலம்

### நாளை

கார்த்திகை 2

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஸப்தமி

முன் இரவு 9.52 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

மாலை 6 11 வரை.

ராகுகாலம்: 4 38-6.08

சுபநேரம்: 9.08-10.38

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தையல் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் இலவச தையல் பயிற்சி நெறி இன்று காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஒரு வருட காலத்துக்கு நடத்தப்படும் இப்பயிற்சி நெறி முதலில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் இதனைத் தொழிலாகக் கொள்பவர்களுக்கு ஊக்குவிப்பும் அளிக்கப்படவிருக்கிறது.

## யாழ் - மன்னார் பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணத்துக்கும், மன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை யாழ் – மன்னார் அரச அதிபர்கள் கூட்டாகச் சேர்ந்து அமுல் செய்ய உள்ளார்கள்.

100 பயணிகள் சேர்ந்தவுடன் முதலாவது கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்.

இதற்கான ஒழுங்குகள், மற்றும் அறிவுறுத்தல்கள் ஏற்கனவே கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று மன்னார் அரச அதிபர் தெரிவித்தார்.

20 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் மன்னாரிலிருந்து கப்பலில் யாழ். செல்வதற்கு ஏற்கனவே பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய இடங்களுக்கு புலிகள் தாக்குதலை விரிவுபடுத்தலாம்!

## அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரை

கொழும்பு, நவ. 16

''விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் அவர்களின் பலம் குறைவடைந்துள்ளது. அதனால் அவர்களது தாக்குதல்கள் ஏனைய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படலாம். அவற்றினை படையினர் எதிர்கொள்வதற்கு உதவும் வகையில் அவசர காலச் சட்டத்தை நீடிப்பது அவசியமாகும்.''

சபை முதல் வரும், பொது நிர்வாக பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்க நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கு பதிலாக அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

விடுதலைப் புலிகள் கற்பிட்டி பிரதேசத்தினில் மீனவர்கள் 13 பேரை கடத்திச் சென்று ஒருவரைக் கொலை செய்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் அபிவிருத்தி, புனர்வாழ்வு பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் தங்களது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

அவர்களுடைய மிலேச்சத்தனமான பயங்கரவாத தாக்குதல்கள் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவலாம். அத்தகைய ஏதேனும் ஒரு தாக்குதல் இடம்பெறுமாயின் அவர்களை எதிர்கொள்வதற்காக படையினரும், பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி அவர் கூறினார்.

---

வன்னிக்கான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தட்டுப்பாடு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பகுதியில் இருந்து பொருள்களை எடுத்துச் செல்ல நேற்று முன்தினம் சாந்தசோலைக்கு லொறிகள் சென்றபோதும் வவுனியாவில் இருந்து உணவு லொறிகள் எதுவுமே சாந்தசோலைக்கு வராத காரணத்தால் அவை திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது (இ-3)

---

கைதிகள் —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்ப் வேண்டியவர்களை அங்கு அனுப்புவது ஆகியவை தொடர்பான இறுதி முடிவு அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படும் என்று கம்லத் தெரிவித்ததையடுத்து, உத்தேச உண்ணாவிரதத்தை தற்காலிகமாக இடை நிறுத்தி வைப்பதாக தமிழ்க்கைதிகள் தெரிவித்தனர்'

களுத்துறை சிறையில்உள்ள 197 தமிழக் கைதிகளில் 35 பேர் உடன் விடுவிக்கப்படவிருப்பதாக கம்லத் தெரிவித்து பெயர் விவரங்களை அங்கு வெளியிட்டார்.

(இ-4)

---

## ஆந்திராவில் 13 பொலிஸார் பலி!

ஹைதராபாத், நவ. 16

ஆந்திராவில் உள்ள ஹைதராபாத் நகரில் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது நக்ஸலைட்டுக்கள நடத்திய தாக்குதலில் 13 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து பெரும் தொகையான ஆயுதங்களையும் நக்ஸலைட்டுகள் எடுத்துச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது (இ)

---

உதவும் —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட சந்திரிகா அரசு மனித உரிமை விடயத்தில் நன்றாகவே நடந்து கொள்கின்றது.

என்றாலும் —

சமீப காலமாக இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் மேற்கு நாடுகளின் மனப்போக்கை மாற்றியிருப்பதாகத் தெரிகின்றது என செய்தி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நான்கு டென்மார்க் பத்திரிகையாளர்கள் அண்மையில் நாட்டை விட்டுவெளியேற்றப் பட்டும் ஸ்ரீலங்க அரசுகுறித்து அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஸ்ரீலங்காவில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள் அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் மனித உரிமைகள் குறித்து உரையாடியபோது, டென்மார்க் பத்திரிகையாளர்கள் விடயத்தையும் பிரஸ்தாபித்தனர். ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளில் டென்மார்க்கும் ஒன்று என அவர்கள் அமைச்சர் கதிர்காமருக்குச் சுட்டிக் காட்டினர்.

அண்மைக் காலமாக ஸ்ரீலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான பல தகவல்கள் தமக்கு கிடைத்த வண்ணம் இருப்பதாகவும் வெளிநாட்டுத் தூதர்கள் அமைச்சர் கதிர்காமரிடம் தெரிவித்திருக்கின்றனர். (உ-3-10)

---

ஆயுதத்தை -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கு காலம் குறிப்பிடப்படவேண்டும் என்பது இதில் ஒன்று. இதில் எமக்கு கருத்து முரண்பாடு இல்லை.

அடுத்தது ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும் என்பது. இது குறித்து சிந்திக்க வேண்டும்.

அமைதி, சமாதானம் நாட்டில் நிலவவேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படல்வேண்டும்.

யுத்தம் என்றால் அது நீண்ட காலத்துக்கு இடம்பெறக்கூடியது. நாட்டைச் சீரழிக்கும் நடவடிக்கையாகவே அது அமையும்.

ஆனால் ஆயுதங்களை கீழே வைத்தல் என்ற விடயம் பற்றி ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டுகிறோம்.

உலக நாடுகளில் இத்தகைய ஆயுத நடவடிக்கைகள் இடம்பெறும் நாடுகளில் சமாதானப் பேச்சு ஆரம்பிப்பதற்காக ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு பதிலாக ''ஆயுதங்களின் மௌனம்'' என்ற அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

எனவே தான் விடுதலைப் புலிகளின் விடயத்திலும் இது பற்றி சிந்திக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகிறோம்.

மூன்றாவது நிபந்தனைக்கு ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே அதில் பிரச்சினை இல்லை.

இந்த சமாதானப் பேச்சுக்கு முன்னதாக நேரடிப் பேச்சு ஒன்றும் இடம்பெற வேண்டும். இதனால் தான் அம் மக்களின் சார்பில் எல்லா இதரப்பினரும் தமது வேறுபாடுகளை மறந்து ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

---

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி

தென்மராட்சி, நவ. 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழையின்மையால் கருகிய நெற்பயிர்களுக்கு இழப்பீடாக விதைநெல்லும் மீள உழவுக்கு மண்எண்ணெயும் வழங்க பிரதேச செயலகம் நடவடிக்கைமேற் கொண்டுள்ளது.

நீரின்மையால் நெற்பயிர்கள் சேதமடைந்த வயல்களின் விவரங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன.

இதே வேளை இதுவரை வயல்களில் நெல் விதைக்காத விவசாயிகளுக்கு விதை நெல் சாவகச்சேரி கமநலச் சேவை நிலையத்தில் வழங்கப்பட்டு வருகிறது (இ-117)

---



## சார்ஜா கிண்ணம் பாகிஸ்தானுக்கு

சாஜா, நவ. 16

சாஜாவில் நடைபெற்ற மூன்று நாடுகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணிநேற்று நியூசிலாந்து அணியை 41 ஓட்டங்களால் வெற்றிபெற்று சாஜா கிண்ணத்தைச் சுவீகரித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 44 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய நியூசிலாந்து அணி 36 ஓவர்களில் 119 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. எல். பி டபிள்யு முறையில் 5 நியூசிலாந்து ஆட்டக்காரர்கள் ஆட்டமிழந்தனர்.

நேற்றய ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணியின் கப்டன் வாஷிம் அக்ரமும் போட்டித் தொடரின் சிறந்த வீரனாக பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த வக்கார் யூனிசும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

---

## உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ 16

உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் மிக அவதானமாக உற்பத்தியில் ஈடுபடவேண்டும் என்று யாழ்ப்பாணம் உதவி விவசாயப் பணிப்பாளர் [விஸ்தரிப்பு] விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:—

யாழ். மாவட்ட விவசாயிகளின் காலபோகப் பயிர்ச் செய்கையில் பணப்பயிராக உருளைக்கிழங்குச் செய்கை ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இப்பயிர்ச்செய்கைக்கு கூடிய முதலீடு தேவை என்பதும் விவசாயிகள் அறிந்த விடயமாகும்.

இக்காலபோக மழைகாலம் தாழ்த்திவிட்டது. எனவே மழை ஆரம்பித்ததும் தொடர்ந்து அடைமழையாகப் பெய்யக்கூடிய வாய்ப்பும் ஏற்படலாம்.

எனவே இம்மாதம் 3 ஆம் வாரத்தில் இங்கு வரவிருக்கும் விதை உருளைக்கிழங்கைப் பெறும் விவசாயிகள் மிகவும் அவதானத்துடன் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுவது இன்றியமையாததாகும்.

ஆகவே கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களைக் கருத்தில் கொண்டு உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது அவசியமானதாகும்.

★ நீர் தேங்கி நிற்கக் கூடிய தரைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

★ நல்ல நீர் வடிப்புள்ள மேட்டுக்காணியில் நடுகையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ முளை அரும்பாத கிழங்கை நடுகை செய்வதை முற்றாகத் தவிர்க்கவேண்டும். முளை அரும்பாத கிழங்கை முளை அரும்பச் செய்த பின்னரே நடுகையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு உங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர், அல்லது திருநெல்வேலி மாவட்ட விவசாய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

கிரனேட் —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னுத்துரை பத்மநாதன் (வயது 48 — நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க லொறிச் சாரதி), வைத்திலிங்கம் தர்மலிங்கம் (வயது 68), இணுவில் சிவகாமி அம்மன் வீதியைச் சேர்ந்த வேலாயுதம் இராசசூரியர் (வயது 46 — ஏழாலை மகாவித்தியாலய ஆசிரியர்), உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த இராசையா பாலச்சந்திரன் (வயது 45 — உடுவில் கல்விக் கந்தோர், காரியாலய உதவியாளர்), கல்வியங்காட்டைச் சேர்ந்த வைரமுத்து குணசேகரம் (வயது 40), ஆனைப்பந்தி நாவலர் வீதியைச் சேர்ந்த கனரத்தினம் நரேந்திரன் (வயது 51) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

---

## உச்சி மாநாடு

கெய்ரோ, நவ. 16

இஸ்ரேலிய - பலஸ்தீன ஒப்பந்தங்கள் உடனடியாக செயற்படுத்தப்படவேண்டும் என கெய்ரோவில் முடிவடைந்த மத்திய கிழக்கு பொருளாதார உச்சி மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது.

---

## அச்சுவேலி சம்பவம்,...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தை அறிந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாக இருந்த போதிலும் குறிப்பிட்ட சிலரால்முன்பின் சிந்திக்காது அல்லது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பிரசாரம் காரணமாக தனக்கும் தனது மகளுக்கும் மனவேதனை உருவாகியுள்ளதாகக் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார்.

தன்னுடன் பஸ்ஸில் வந்த பெண்மணி ஒருவர் சிப்பாய் இருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு தன்னை வற்புறுத்தியதாகவும் சிறுமி தெரிவித்துள்ளார். பாடசாலை அதிபர் கூறியது போல் தப்பான எதுவும் இடம் பெறவில்லை எனவும் சிறுமி தெரிவித்தார்.

'ரிவிரஸ' இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் கடந்த சில மாதங்களாக அது போன்ற எவ்வித சம்பவங்களும் இப்பிரதேசத்தில் நடந்ததாக இதுவரை தெரியவரவில்லை என அச்சிறுமியின் தந்தை கூறியுள்ளார்.

இதைப்பற்றிக் கருத்துத் தெரிவித்த அப்பிரதேச மக்கள் அது போன்ற சம்பவம் ஒன்று அப்பிரதேசத்தில இதுவரை நிகழவில்லை எனவும் அந்தச் சோதனை முகாமில் பணிகள் மேற்கொள்ளப்படும் முறையை நோக்கும்போது அது போன்றதொரு சம்பவம் ஒன்று ஏற்படுவதற்கு எவ்வித சந்தர்ப்பமும் இல்லை எனவும் உறுதியுடன் தெரிவித்துள்ளனர்.

சிறுமியுடன் நடத்திய பேட்டி பதிவு செய்யப்பட்டுள்ளதோடு அப்பேட்டியை அவதானிக்கும்போது இப்பிரசாரங்கள் ஏதோவொரு குழுவினரின் தூண்டுதலின் பெயரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது; பாதுகாப்புப் படையினரை அபகீர்த்திக்கு உள்ளாக்கி, பாடசாலைகளை மூடுதல் மூலமாக பிரதேசத்தில் நிலவும் சுமுகமான நிலையைச் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டு இப்போலிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்பது நன்றாகவே தெரிகின்றது. அச்சுவேலிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏனைய பாடசாலைகளிலும் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளச் செய்வதற்கு சிலர் முயற்சி எடுத்தபோதிலும் அப்பிரதேச ஆசிரியர்களோ, மாணவர்களோ அத்தந்திர வழிமுறைகளுக்கு அகப்படவில்லை.

இதுபற்றி கருத்துத் தெரிவிக்கும் பாதுகாப்புப் படையினர் சிறுமியினால் குறிப்பிடப்பட்ட இடத்தில் பெண் பாதுகாப்பு ஊழியர் ஒருவரும், பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தினந்தோறும் கடமையில் ஈடுபட்டிருப்பதால் இது போன்ற சம்பவம் ஒன்று இடம்பெற சந்தர்ப்பம் இல்லை எனத் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இச்சம்பவத்துக்குப் பின்னணியாக உள்ள அழிவுகாரச் சக்தி எதுவென மக்கள் தற்போது அறிந்து கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

---

## மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 200 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org